13.05.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**விவசாயத்தை விரும்பிச் செய்திட...**

பல நூற்றாண்டு காலமாக உணவுக்காகவும், உயர்வானதாகவும், விரும்பியும், செய்யப்பட்டு வந்த உழவுத் தொழிலைத் தற்கால இளைஞர்கள் கௌரவக் குறைச்சலாகக் கருதிப் புறக்கணித்து வருகின்றனர். அதோடு உழவுத் தொழில் செய்பவர்களிலும் பலர் விவசாயம் கட்டுப்படியாகவில்லை கடன்தான் மிஞ்சுகிறது என்று அதிருப்தியடைகின்றனர்.

தன் சந்ததியினர் உழவுத்தொழிலைச் செய்யாமல் வேறு ஏதாவது வேலைக்குச் சென்றுவிட வேண்டும் என்று நினைத்து அவர்களை அதற்கேற்ப உருவாக்கி விடுகின்றனர். இதேநிலை நீடித்தால், வரும் காலங்களில் விவசாயம் செய்யாமல் நிலங்களைத் தரிசாகப் போட்டுவிட்டு அல்லது போகின்ற விலைக்கு விற்றுவிட்டு நகரங்களுக்குச் சென்று வேலைதேடி குடியேறுகிற ஓர் அவலநிலைதான் ஏற்படும்.

இந்த நிலை ஏற்பட்டால் கடுமையான உணவுப்பொருள் தட்டுப்பாடும், வேலைவாய்ப்பின்மையும் நகரங்களில் நெருக்கடியும் மேலும் அதிகரிக்கத்தான் செய்யும்.

இந்தியாவின் பிரதான தொழிலாகக் கருதப்படும் விவசாயத்தைப் புறக்கணித்துவிட்டு, வேறு பல தொழில்களின் மூலம் அனைவருக்கும் வேலை வாய்ப்பை நிச்சயமாக உண்டுபண்ண முடியாது. மக்கள் தொகை அதிகம் உள்ள நம் நாட்டிற்கு உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதென்பது இயலாத காரியம் என்றே சொல்ல வேண்டும்.

அரசு எவ்வளவுதான் உழவுத் தொழிலை ஊக்கப்படுத்தப் பல்வேறு திட்டங்களைத் தீட்டினாலும் தற்கால இளைஞர்கள் உழவுத் தொழிலை விரும்பி அதை முழு ஈடுபாட்டுடன் செய்தால் மட்டுமே விவசாயம் மேன்மை அடையும்.

அரசு கொடுக்கும் மானியத்தையும், வங்கிகள் கொடுக்கும் கடனையும், எதிர்பார்த்து விவசாயம் செய்வதும், அரசு எப்போது கடனைத் தள்ளுபடி

செய்து அறிவிப்பு வெளியிடும் என்று எதிர்பார்த்திருப்பதும் ஆரோக்கியமானதல்ல.

நம் முன்னோர்கள் காலம் காலமாகச் செய்து வந்த கால்நடைகளைச் சார்ந்த இயற்கை விவசாயம், தொழு உரமிடுதல், பசுந்தாள் உரமிடல், நிலத்திலும், களத்திலும் எஞ்சும் கழிவுகளை நிலத்திற்கே உரமாக இடுதல், பல பயிர்களை மாற்றி மாற்றிப் பயிர் செய்தல், சிறு தானியங்களைப் பயிர் செய்து அதனை உணவாகவும் உண்ணுதல், இதுபோன்ற இன்னும் எத்தனையோ இயற்கை முறைகளைப் பின்பற்றி விவசாயம் செய்துவந்தனர்.

இதனால் ரசாயன, பூச்சிகொல்லி மருந்துகளுக்குச் செலவிடும் கணிசமான தொகை மீதமானது மட்டுமன்றி நிலம் உயிர்த்தன்மை பெற்று, மண்புழுக்களும், நன்மை செய்யும் பூச்சிகளும் பல்கிப்பெருகின; நிலம் பண்பட்டு நல்ல விளைச்சலையும் காணமுடிந்தது. அத்துடன் நச்சில்லாத நல்ல உணவுப் பொருள்களையும் பெற முடிந்தது.

இவ்வாறாகச் செய்யப்படும் தற்சார்புடன் கூடிய உழவுத்தொழிலின் மூலம் கணிசமான ஒரு தொகையையும் ஆண்டுதோறும் சேமிக்க முடிந்தது. இயற்கை பொய்க்கின்ற சில சமயங்களில் அந்தச் சேமிப்பு அவர்களுக்குக் கைகொடுத்தது. கடனையோ மற்ற சலுகைகளையோ எதிர்பார்த்திருக்க வேண்டிய ஒரு நிலை ஏற்படவில்லை.

இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் போன்றோரின் அனுபவ உரைகளாலும் செயல் விளக்கத்தாலும் விழிப்படைந்த தற்கால விவசாயிகளில் சிலர் இயற்கை விவசாயம் செய்து நல்ல பலனும் நிறைவும் பெற்று வருகின்றனர்.

அதைக் காண்கின்ற அருகில் உள்ள விவசாயிகளும் அந்த முறையினைப் பின்பற்றி நல்ல மகசூல் எடுத்து வருகின்றனர். வரும் காலங்களில் இயற்கை விவசாயம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கவேச் செய்யும்.

படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும் வேறு வேலைக்காக அலைந்து திரியாமல் ஆரோக்கியமான உழவுத் தொழிலை விரும்பிச் செய்யக்கூடிய காலம் வெகு சீக்கிரம் வரத்தான் போகிறது. அது மட்டுமன்றி வள்ளுவன் சொன்னதுபோல்

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்: அதனால் உழந்தும் உழவே தலை (குறள் - 1031).

-மக்கள் உழவுத்தொழிலைச் செய்யாமல் பிற தொழில்களைச் செய்ய விரும்பி அலைந்துதிரிந்து முடிவில் ஏரால் உழுதொழிலைச் செய்பவர்களின் பின்செல்வர்.

ஆதலால் உழவுத்தொழிலே உயர்வானது என எண்ணுகின்ற ஒரு நிலை ஏற்படும். ஒரு நல்ல விவசாயி தன் சந்ததியினரும் தொடர்ந்து முழு ஈடுபாட்டுடன் நல்ல விவசாயம் செய்ய வேண்டும் என்றே எண்ணுவான். உழவுத்தொழிலைச் விரும்பிச் செய்யக்கூடிய ஆண்களும், பெண்களும், நல்ல ஆரோக்கியமான உடல்வாகும் தயாள குணமும், தன்னம்பிக்கையும் உடையவர்களாக இருப்பதை இன்றும் காணமுடிகிறது. இதைவிட பெரிய செல்வம் வேறு என்னவாக இருக்கமுடியும்?

பல்வேறு தொலைக்காட்சி நிறுவனங்கள் உழவுத்தொழிலை மேம்படுத்திட தங்களின் பங்களிப்பாக பாரம்பரியமிக்க இயற்கை விவசாயம் செய்து வரும் விவசாயிகளின் பண்ணைகளுக்கே நேரில் சென்று நேர்த்தியாக நேர்காணல் நடத்த வேண்டும். விவசாயத்தில் ஆர்வம் உண்டு பண்ணும் வகையில் நிகழ்ச்சிகளைத் தொகுத்து தினமும் ஒரு மணி நேரமாவது ஒளிபரப்பினால் விவசாயிகள் பயனடைவது மட்டுமல்லாமல் படித்து வேலையின்றி உள்ள எண்ணற்ற இளைஞர்களில் பலர் இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து விவசாயத்தை விரும்பிச் செய்திட முன்வருவர்.

## விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்ய துரித நடவடிக்கை

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் இரா.கஜலட்சுமி தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழை அதிக அளவில் பெய்ததன் காரணமாக, நெல் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்வதற்காக கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது. இதன் அடிப்படையில் 68 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், 14

துணை கொள்முதல் நிலையங்கள் என 82 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நெல் கொள்முதல் நிலையங்களை ஒழுங்குபடுத்த மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அலுவலர்கள் முன்னிலையில் பல்வேறு ஆய்வுக் கூடங்கள் நடத்தப்பட்டு, நெல் கொள்முதல் செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பிப்ரவரி 22-ஆம் தேதி முதல் மே 9-ஆம் தேதி வரை விவசாயிகளிடம் இருந்து 46,950 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு அவர்களுக்கு ரூ. 53.99 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மேலும் விவசாயிகளால் கொண்டு வரப்பட்டுள்ள 21,918 மெட்ரிக் டன் நெல் மே 25-ஆம் தேதிக்குள் கொள்முதல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

**வருசநாடு மலைப்பகுதியில் மழை: மூல வைகையில் நீர் வரத்து**

வருசநாடு மற்றும் வெள்ளிமலைப் பகுதியில் மழை பெய்து வருவதால் மூல வைகையாற்றில் நீர் வரத்து ஏற்பட்டுள்ளது.

வருசநாடு மற்றும் வெள்ளி மலைப்பகுதியில் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக மழை இல்லாததால் வனப்பகுதியில் உள்ள மரங்கள், செடிகள் தண்ணீர் இல்லாமல் வாடும் நிலை ஏற்பட்டது. மேலும் வன விலங்குகளுக்கு தண்ணீர் இல்லாததால் அவை வேறு பகுதிகளுக்கு இடம் பெயரும் நிலை ஏற்பட்டது.

இதனால் வனத்துறையினர் தொட்டி அமைத்து வனவிலங்குகளுக்கு தண்ணீர் வழங்கி வந்தனர். இந்த நிலையில் வெள்ளிமலை மற்றும் வருசநாடு வனப்பகுதியில் கடந்த நான்கு நாள்களுக்கு மேலாக பரவலாக மழை பெய்து வருவதால் மூலவைகையாற்றில் நீர் வரத்து ஏற்பட்டுள்ளது. வைகையாற்று நீர் தற்போது முறுக்கோடை வரை வந்துள்ளது. மேலும் தொடர்ச்சியாக மழை பெய்தால் வைகை அணையை வந்தடையும்.

**கர்நாடக மாநிலத்தில் இருந்து கோழிக்குஞ்சுகள் வாங்க வேண்டாம் :பண்ணையாளர்களுக்கு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தல்**

கர்நாடகம், கேரளம் மற்றும் ஆந்திர மாநிலங்களிலிருந்து கோழிக்குஞ்சுகள், கோழித்தீவனங்களை வாங்க வேண்டாம் என பண்ணையாளர்களுக்கு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

நாமக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் பறவைக்காய்ச்சல் நோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து நாமக்கல் மாவட்ட கோழிப்பண்ணை உரிமையாளர்கள் மற்றும் முட்டை உற்பத்தியாளர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்த மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி பேசியது: கர்நாடக மாநிலம், பிடார் மாவட்டம், ஹமனபாத் வட்டம் மௌளக்கேரா கிராமத்தில் பறவைக்காய்ச்சல் நோய் அறிகுறி கண்டறியப்பட்டுள்ளதாக தகவல்கள் வரப்பெற்றுள்ளன.

எனவே நாமக்கல் மாவட்டத்தில் பறவை காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்கு பல்வேறு பாதுகாப்பு மற்றும் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி உள்ளது.

கோழிப்பண்ணை உரிமையாளர்கள் கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து கோழிக்குஞ்சுகள் கோழிகள், கோழி முட்டைகள், வாத்துகள், வாத்து முட்டைகள், வாத்துக்குஞ்சுகள், கோழித்தீவனங்கள் போன்றவற்றை வாங்குவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். மற்ற மாநிலங்களில் இருந்து வாங்கும்போது மருத்துவத்துறையின் சான்றளிக்கப்பட்டவைகளை மட்டுமே வாங்க வேண்டும்.

பண்ணைகளில் வழக்கத்திற்கு மாறாக அதிக கோழிகள் இறப்பு ஏற்பட்டாலோ அல்லது அதிக கோழிகளுக்கு நோய் தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டாலோ உடனடியாக கால்நடை மருத்துவ அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

மேலும் கிருமி நாசினி தெளிப்பு, நோய் தடுப்பு மருந்து தெளிப்பு உள்ளிட்ட பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். கோழி

பண்ணைகளின் நுழைவு வாயில்களில் கிருமி நாசினி தொட்டிகள் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

பண்ணை வேலையாட்கள் பண்ணையினுள் நுழையும் போதும், கிருமி நாசினி தொட்டியில் கால்களை நனைத்தும், வேலை முடிந்து வெளியே செல்லும் போதும் கை, கால்களை நன்கு கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்த பின்னர், உடைகளையும் மாற்றிவிட்டுச் செல்ல வேண்டும்.

பண்ணையின் உள்ளே நுழையும் வாகனங்களின் சக்கரங்கள் கிருமி நாசினி தொட்டியில் முழுமையாக நனைத்த பின்னரே பண்ணையின் உள்ளே அனுமதிக்க வேண்டும். பண்ணையில் மனித நடமாட்டம் மிகக் குறைந்த அளவிலேயே இருத்தல் வேண்டும். ஒரு கொட்டகையிலிருந்து மற்றொரு கொட்டகைக்கு வேலை ஆட்கள் செல்லக் கூடாது.

இந்த அறிவுரைகளை பின்பற்றி பண்ணையாளர்கள் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கோழிப்பண்ணைகளில் பறவைக்காய்ச்சல் நோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இதனைத்தொடர்ந்து நாமக்கல் மாவட்டம் குரும்பபட்டி, புதுப்பட்டி அருகே நல்லூர் வடக்குமேடு ஆகிய இடங்களில் உள்ள கோழிப்பண்ணைகளில் பறவைக்காய்ச்சல் நோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கு.பழனிச்சாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் எல்.பாரதிதேவி, நாமக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறையின் இணை இயக்குநர் கே.ராமலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வாழப்பாடியில் பலத்த மழை**

வாழப்பாடியில் புதன்கிழமை இரவு பலத்த மழை பெய்தது. இதனால், பொதுமக்கள், விவசாயிகள் பெரு மகிழ்ச்சியடைந்தனர்.

வாழப்பாடியில் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பு மழை பெய்தது. இதனால், வெப்பம் தணிந்து, குளிர்ச்சி நிலவியது. இந்தநிலையில், புதன்கிழமை இரவு மீண்டும் மழை பெய்தது.

**பறவைக் காய்ச்சல் நோய்த் தடுப்புப் பணிகள் தொடக்கம்**

நாகை மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் நோய்த் தடுப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி.

கர்நாடக மாநில பிடார் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, பறவைக் காய்ச்சல் நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி தலைமை வகித்துப் பேசியது:

பறவைக் காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், கண்காணிப்புப் பணிக்காக, கால்நடைப் பராமரிப்புத் துறையினரைக் கொண்ட 11 அதிவிரைவுப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கோழிப் பண்ணைகளின் நுழைவு வாயிலில், மிதியடி குட்டை அமைத்து, அதில் குளோரின்-டை-ஆக்ஃஸடு கிருமி நாசினி கலவை கலந்து வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோழிப்பண்ணைக்கு உள்செல்லும், வெளியாகும் வாகனங்களை கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய பண்ணை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து தொடர் கண்காணிப்பில் ஈடுபட கால்நடைப் பராமரிப்புத் துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எந்தப் பகுதியிலாவது கோழிகளுக்கு அசாதாரண இறப்பு ஏற்பட்டால், உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனை அல்லது

கால்நடை மருந்தகத்துக்குத் தகவல் அளிக்கப் பொதுமக்கள் முன்வர வேண்டும் என்றார் ஆட்சியர் சு. பழனிசாமி.

**நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை நீடிப்பு: பாபநாசம், மணிமுத்தாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தொடரும் மழையால் பாபநாசம், மணிமுத்தாறு அணைகளின் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் மழை தொடர்ந்து பெய்து வருவதால் அணைகளின் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பாளையங்கோட்டையில் 50 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. பிற இடங்களில் மழையளவு (மில்லி மீட்டரில்):

திருநெல்வேலி 35, பாபநாசம் அணை 31, அம்பாசமுத்திரம் 28.2, செங்கோட்டை 28, குண்டாறு அணை 28, கருப்பாநதி அணை 27, தென்காசி 22.4, சேரன்மகாதேவி 22, கன்னடியன் அணைக்கட்டு 22, மணிமுத்தாறு அணை 19.4, பாபநாசம் கீழ் அணை 18, மூலைக்கரைப்பட்டி 16, சேர்வலாறு அணை 15, ஆய்க்குடி 15.2, ராமநதி அணை 11, சிவகிரி 10, அடவிநயினார் அணை 10, நம்பியாறு அணை 5, வடக்குப் பச்சையாறு அணை 2, கடனாநதி அணை 1.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 262.82 கனஅடி, சேர்வலாறு அணைக்கு 190 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு 209 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

1,000 கனஅடி திறப்பு: பாபநாசம், சேர்வலாறு அணைகளிலிருந்து 712.25 கனஅடி, மணிமுத்தாறு அணையிலிருந்து பிரதான கால்வாயில் 50 கனஅடி, தாமிரவருணியில் 200 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

நீர்மட்டம்: பாபநாசம் அணை - 64.75 அடி, சேர்வலாறு அணை - 72.67 அடி, மணிமுத்தாறு அணை - 80.95 அடி, கடனாநதி அணை - 27.60 அடி, ராமநதி அணை -25 அடி, கருப்பாநதி அணை - 24.94 அடி, குண்டாறு அணை - 11.80 அடி,

அடவிநயினார் அணை - 44.50 அடி, வடக்குப் பச்சையாறு அணை - 24.60 அடி, நம்பியாறு அணை - 13.02 அடி, கொடுமுடியாறு அணை - 2.50 அடி.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பழநியில் வரத்து அதிகரிப்பு மாங்காய் விலை குறைவு**

பழநி: பழநி பகுதியில் மாங்காய் வரத்து அதிகரித்துள்ளதால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. எதிர்பார்த்த விலை கிடைக்காததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பழநி அருகே பாலசமுத்திரம், சட்டப்பாறை, ஆயக்குடி, தொப்பம்பட்டி, நெய்க்காரப்பட்டி, தேக்கந்தோட்டம் பகுதிகளில் மாந்தோப்பு அதிகளவில் உள்ளது. தற்போது சீசனை முன்னிட்டு மாமரங்களில் காய்ப்பு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ஆயக்குடி சந்தை, மொத்த மார்க்கெட்டில் கடந்த மாதம் கிலோ 18 முதல் 25 வரை விற்ற கல்லா மாங்காய் தற்போது கிலோ 14 முதல் 18 வரையே விற்கப்படுகிறது.

புது ஆயக்குடி வியாபாரி பழனிச்சாமி கூறுகையில்,"ஆந்திரா, கர்நாடகவிற்கு ஊறுகாய், ஜூஸ் பயன்பாட்டிற்காக மொத்தமாக மாங்காய் அனுப்பிவைக்கப்படுகிறது. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு காய்ப்பு குறைவுதான். இருந்தாலும் சீசன் காரணமாக வரத்து அதிகரித்துள்ளதால் மாங்காய், மாம்பழம் விலை குறைந்துள்ளது. எதிர்பார்த்த விலை இல்லாததால் லாபம் இல்லை," என்றார்.

**விளைச்சல் இல்லாததால் விலையானது திராட்சை - விவசாயிகள் மகிழ்ச்சி**

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத்தில் மழை இல்லாததால் திராட்சை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் கிலோ ரூ.50க்கு விலை போவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் ஏ.வெள்ளோடு, செம்பட்டி, ஒட்டன்சத்திரம், வத்தலக்குண்டு, நிலக்கோட்டை, கன்னிவாடி, நத்தம் உட்பட பல இடங்களில் திராட்சை பயிரிடப்படுகிறது. திராட்சை செடிகள் நடவு செய்த ஓராண்டுக்குள் விளைச்சலுக்கு வந்து விடும். ஓராண்டுக்கு 2 முறையும், தண்ணீர் வசதியுள்ள இடங்களில் 3 முறையும் பழத்தை அறுவடை செய்யலாம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக மழை இல்லாததால், திராட்சை விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கிணற்று பாசனத்தை பயன்படுத்தி, பல இடங்களில் விவசாயம் செய்துள்ளனர்.

நல்ல விலை உள்ளது

விளைச்சல் பாதிக்கப்பட்டு உள்ளதால், இந்தாண்டு குறைந்தளவே திராட்சை விற்பனைக்கு வருகிறது.

இதனால் கிலோ ரூ.50 வரை விற்கப்படுகிறது. இது அறுவடை செய்யும் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏ.வெள்ளோடு விவசாயி எஸ்.கஸ்பர் கூறியதாவது:

திராட்சை வெயில் காலத்தை விட, மழைக் காலத்தில்தான் பழம் சொத்தை இல்லாமல் நன்றாக இருக்கும். இயற்கை மழை இல்லாததால், செடியில் செல் பூச்சி, சாம்பல் நோய், வண்டு தாக்குதல் இருக்கும். இவற்றிற்கு மருந்து தெளித்தால் பழம் தெளிவாகி விடும். இந்தாண்டு மழை இல்லாததால் விளைச்சல் மந்தமாக இருந்தது. இதனால் மார்க்கெட்டில் நல்ல விலை உள்ளது. இது மகிழ்ச்சி தருகிறது, என்றார்.

**வரத்து குறைவால் வெங்காயம் விலை உயர்வு:10 கிலோ சிப்பம் ரூ.300க்கு விற்பனை**

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி மார்க்கெட்டிற்கு வரத்து குறைவால் வெங்காய விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. 10 கிலோ சிப்பம் ரூ. 300க்கு விற்கப்படுகிறது. சொக்கத்தேவன்பட்டி, பின்னத்தேவன்பட்டி, பாலக்கோம்பை, ராயவேலுூர், ராமகிருஷ்ணாபுரம், தெப்பம்பட்டி, ஆவாரம்பட்டி, சேவாநிலையம், சித்தார்பட்டி, ராஜதானி, மூணாண்டிபட்டி, அணைக்கரைப்பட்டி, வெள்ளையத்தேவன்பட்டி, புள்ளிமான்கோம்பை உட்பட பகுதிகளில் வெங்காய சாகுபடி அதிகம் உள்ளது.

கடந்தாண்டு நவம்பர், டிசம்பரில் வெங்காய விளைச்சல் குறைந்தது. இதனால் விலை படிப்படியாக உயர்ந்து கிலோ ரூ. 50 வரை இருந்தது. கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் பலரும் அதனை நடவு செய்தனர். ஒரே கால கட்டத்தில் பல ஏக்கர் நிலங்களில் விதைக்கப்பட்டதால் குறிப்பிட்ட காலத்தில் மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்தது.

விலை கிலோ ரூ. 10 வரை குறைந்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியது. இதனால் அதை மீண்டும் நடவு செய்ய தயக்கம் காட்டினர். கடந்த சில வாரங்களாக வெங்காய வரத்து படிப்படியாக குறைந்து விலையில் மீண்டும் ஏற்றம் ஏற்பட்டு வருகிறது. கடந்த சில வாரங்களுக்கு முன் 10 கிலோ கொண்ட வெங்காய சிப்பம் ரூ. 200 க்கும் கீழே இருந்தது. பின்னர் ரூ. 200 முதல் ரூ.250 வரை உயர்ந்தது. தற்போது ரூ. 300 ஆக உயர்ந்துள்ளது.

விவசாயிகள் கூறியதாவது: அதிகமான மழை, வெயில் வெங்காய சாகுபடிக்கு ஏற்ற காலம் இல்லை. தற்போது கோடை வெயில் உச்சத்தில் இருப்பதால் வெங்காய விளைச்சல் பெருமளவு குறைந்து விட்டது. கோடைமழை கைகொடுக்கும்பட்சத்தில் இன்னும் சில நாட்களில் வெங்காய நடவுப்பணிகள் துவங்கி விடும். ஆண்டிபட்டி பகுதியில்

இருந்து நாள் ஒன்றுக்கு 20 முதல் 25 டன் அளவு வெங்காயம் விளைச்சல் கிடைக்கும். தற்போது விளைச்சல் 5 டன் அளவுக்கும் குறைவாகவே உள்ளது. இதுபோன்ற நேரங்களில் வியாபாரிகள் மூலம் வெளிமாநிலங்களில் இருந்து வெங்காயம் கொண்டு வரப்படுகிறது. இதுவிவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது, என்றனர்.

**ரூ.7 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்**

நாமக்கல்: நாமக்கல் மற்றும் பரமத்தி, திருச்செங்கோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில், 6,000 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்படும் பருத்தி ரகங்கள், நாமக்கல் என்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வியாழக்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வரப்படும்.நேற்று நடந்த ஏலத்தில், ஆர்.சி.ஹெச்., குறைந்தபட்சம், 4,599 ரூபாய், அதிகபட்சம், 5,279 ரூபாய், டி.சி.ஹெச்., குறைந்தபட்சம், 4,560 ரூபாய், அதிகபட்சம், 6,289 ரூபாய், சுரபி ரகம் குறைந்தபட்சம், 4,975 ரூபாய், அதிகபட்சம், 5,279 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 450 மூட்டை பருத்தி, ஏழு லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**திருப்புவனத்தில் தென்னந்தட்டிகளுக்கு கிராக்கி**

திருப்புவனம்:வெயில் காரணமாக தென்னந்தட்டிகளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

திருப்புவனம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான தென்னை மரங்கள் உள்ளன. தென்னை மட்டைகளில் இருந்து விசிறி, தட்டி உள்ளிட்டவை தயாரிக்கப்படுகின்றன. திருப்புவனம், மடப்புரம், லாடனேந்தல்,திருப்பாச்சேத்தி, கானூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தட்டிதயாரிப்பு தொழில் தீவிரமாக நடந்து வருகிறது. தேங்காய் வெட்டு நடைபெறும் போது பக்கவாட்டில் உள்ள தென்னை மட்டைகளை வெட்டி விடுவார்கள்.

அவற்றை விலைக்கு வாங்கி வந்து தண்ணீரில் ஊற வைத்து தட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. சாதாரண தட்டி,மூன்று மடை தட்டி, விசிறி உள்ளிட்ட பல்வேறு ரகங்கள் தயாரிக்கப்படுகின்றன.

கடந்தாண்டை விட இந்தாண்டு வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் வீடுகள், வர்த்தக நிறுவனங்களில் தென்னந்தட்டிகளை வெயிலுக்கு இதமாக கூரையில் போட்டு வருகின்றனர். இது தவிர ஆட்டோக்களின் மேற்புறம் தென்னந்தட்டிகளை போட்டு வெப்பத்தை குறைத்து வருகின்றனர். மூனு மடை தட்டி கடந்தாண்டு வரை 25 முதல் 30 ரூபாய் வரை விற்பனையானது.

இந்தாண்டு மூனு மடை தட்டி 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

தயாரிப்பாளர்கள் செல்வி, காந்தி கூறுகையில்; மடப்புரத்தில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்டோர் இத்தொழிலில் ஈடுபடுகிறோம். மழை இல்லாததால் தென்னை மரங்களில் விளைச்சல் இல்லை. மேலும் தண்ணீர் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் தயாரிப்பு வெகுவாக குறைந்து வருகிறது. நாள் ஒன்றுக்கு 3 முதல் 5 தட்டிகள் வரை பின்னலாம் என்றார்.

# தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அரூரில் 6.2 மி.மீ மழை**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாள் முதல், கோடை மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் தணிந்து வருகிறது. கடந்த 2ம் தேதி ஒகேனக்கல்லில் மட்டும் 1.6 மி.மீ மழை பெய்தது. அதனை தொடர்ந்து 4ம் தேதி 67.3 மி.மீ மழையும், 8ம் தேதி 35.6 மி.மீட்டரும் பெய்தது. மாவட்டத்தில் மொத்தம் 104.5 மி.மீ மழை பெய்துள்ளது. இதனிடையே,

கடந்த 4 நாட்களாக மழையின்றி காணப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் அரூர் பகுதியில் பரவலாக மழை பெய்து. அரூரில் மொத்தம் 6.2 மி.மீ மழை பதிவானது.

**ஓசூர் எல்லையில் பறவை காய்ச்சல் நோய் எதிரொலி வாகனங்களுக்கு கிருமி நாசினி தெளிப்பு**

ஒசூர்,: பறவை காய்ச்சல் எதிரொலியாக, கர்நாடக மாநிலத்தில் இருந்த, தமிழகத்துக்கு கோழி மற்றும் கோழித் தீவனம் ஏற்றி வரும் அனைத்து வாகனங்களை ஜூஜூவாடி சோதனை சாவடியில் தடுத்து நிறுத்தி, கால்நடைத்துறை மருந்துவர்கள் கிருமி நாசினி மருந்தை தெளித்து வருகின்றனர்.கர்நாடக மாநிலம் பீதர் மாவட்டத்தில் உள்ள ஹாம்நாத், மோகராகி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பறவை காய்ச்சல் நோய் பரவி வருகிறது. பறவை காய்ச்சல் பாதித்த 1.5 லட்சம் கோழிகளை, சுகாதாரத்துறை அதிகாரிகள் கண்டறிந்து, அவற்றை தீயிட்டு எரித்து அழித்து வருகின்றனர். மேலும், பறவை காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், கர்நாடக மாநிலத்தில் பரவி வரும் பறவை காய்ச்சல் நோய், தமிழகத்திற்குள் பரவாமல் தடுக்கும் வகையில், தமிழக எல்லையான ஒசூர் ஜூஜூவாடி சோதனை சாவடியில் மாவட்ட கால்நடைத்துறை அதிகாரிகள் முகமிட்டு உள்ளனர். இவர்கள், வெளிமாநிலங்களில் இருந்து, தமிழகத்திற்கு கோழி, முட்டை, கோழித் தீவனங்கள் மற்றும் காய்கறி உள்ளிட்ட உணவு பொருட்களை ஏற்றி வரும் அனைத்து வாகனங்களையும் தடுத்து நிறுத்தி சோதனையிடுகின்றனர்.

மேலும், இந்த வாகனங்களின் டயர்கள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பறவை காய்ச்சல் நோய் கிருமிகளை அழிக்கும் வகையில், கிருமி நாசினி மருந்தினை தெளித்து தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இது குறித்து கால்நடைத்துறை மருத்துவர் செல்வி கூறுகையில், 'மாவட்ட கால்நடைத்துறை இயக்குனர் செல்லதுரை மற்றும் ஒசூர் உதவி கால்நடைத்துறை இயக்குனர் மணிமாறன் ஆகியோரின் அறிவுரையின்

பேரில், பறவை காய்ச்சல் நோய் பரவுவதை தடுக்க, இந்த தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். குறிப்பாக கோழித் தீவனம், கோழி மற்றும் முட்டை கொண்டு வரும் வாகனம் மட்டுமின்றி, காய்கறி உள்ளிட்ட இதர பொருட்கள் கொண்டு வரும் வாகனங்களுக்கும் தவறாமல் கிரிமி நாசினி மருந்து தெளிக்கிறோம். இதனால் தமிழகத்தில் பறவை காய்ச்சல் நோய் பரவுவதை முற்றிலுமாக தடுக்கப்படும்' என்று அவர் கூறினார்.

**விதை பரிசோதனை செய்து மகசூல் பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

ஊட்டி,: மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்து அதன் தரத்திற்கேற்ப விதைத்தால் நல்ல விளைச்சல் பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் லாவண்யா ஜெயசுதா கூறியிருப்பதாவது: ஊட்டி ரோஜா பூங்கா அருகே தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் விதை பரிசோதனை பரிசோதனை நிலையத்தில் மாவட்டத்தில் விளைய கூடிய கேரட், பீட்ரூட், பீன்ஸ், காலிபிளவர், முட்டைகோஸ், முள்ளங்கி, டர்னிப், கோதுமை, பாலக் கீரை போன்ற விதைகளில் முளைப்புத்திறன் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

விதைபரிசோதனை நிலையத்தில் இரண்டு வகையான மாதிரிகள் பெறப்படுகின்றன. விதை ஆய்வாளர் மூலம் விற்பனை நிலையங்களில் இருந்து எடுக்கப்படும் ஆய்வாளர் விதை மாதிரிகள், விதை விற்பனையாளர் மற்றும் விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் பணி விதை மாதிரிகள் ஆகும்.

பணி விதை மாதிரிகள் பரிசோதனைக்கு ரூ.30 செலுத்த வேண்டும். கேரட் மற்றும் பீட்ரூட் விதைகளின் முளைப்புத்திறன் 60 சதவீதம் காணப்பட்டால் தரமான விதையாகும். பரிசோதனை முடிவுகள் 7 முதல் 14 நாட்களுக்குள் அளிக்கப்படும். பீன்ஸ் மற்றும் பட்டானி விதைகளின் முளைப்புதிறன் 75 சதவீதம் காணப்பட வேண்டும். பரிசோதனை முடிவுகள் 5 முதல் 9 நாட்களுக்குள் அளிக்கப்படும். நூல்கோல், முள்ளங்கி, முட்டைகோஸ் விதைகளின் முளைப்பு திறன் 70

சதவீதமாகவும், காலிபிளவரில் 65 சதவீதமும் முளைப்பு திறன் காணப்பட வேண்டும். பரிசோதனை முடிவுகள் 4 முதல் 10 நாட்களுக்குள் அறிவிக்கப்படும். எனவே விதைகளின் தரம் அறிந்து பயிரிட்டு அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு வேளாண் அலுவலர் லாவண்யா ஜெயசுதா தொிவித்துள்ளார்.

**திருச்சியில் தொடர் மழை**

திருச்சி,: திருச்சியில் தொடர்மழை ெபய்து வருவதால் கோடை உழவு பணி மும்முரமாக நடந்து வருகிறது.

அக்னி நட்சத்திரம் துவங்கும் முன் கடந்த ஒரு மாதமாகவே திருச்சியில் வெயில் மக்களை சுட்டெரித்தது. கடும் வெப்பத்தை மக்கள் அனுபவித்து வந்த நிலையில், கடந்த 5 நாட்களாக குளிர்ந்த காற்றுடன் அவ்வப்போது மழைபெய்து வருகிறது. நேற்றுமுன்தினம் பெய்த மழைக்கு திருச்சியில் ஓரளவு வெப்பம் நீங்கி குளிர்ந்த காற்று வீசியது. கடும் வெப்பத்தை அனுபவித்த திருச்சி மக்கள், கோடை மழையின் வருகையால் அக்னி வெயிலின் தாக்கம் குறைந்து மகிழ்ச்சி அடைந்தனர். இந்த மழையால் கோடை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும், மழைநீரை சேமிக்க தரிசு வயலில் கோடை உழவு பணிகளும் மும்முரமாக நடக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 149.90 மி.மீ மழை பதிவாகியுள்ளது. குறைந்த பட்சமாக நந்தியார் தலைப்பில் 1 மி.மீ, திருச்சி டவுன் 2 மி.மீ, அதிகபட்சமாக தேவிமங்கலத்தில் 32 மி.மீ, முசிறியில் 30 மி.மீ மழை பெய்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் பதிவான மழை அளவு (மி.மீ): லால்குடி 2.50, மணப்பாறை 6.60, புள்ளம்பாடி 8.60, ஏர்போர்ட் 3.20, மருங்காபுரி 15.20, பொன்னையார் அணை 5.80, நவலூர் கொட்டப்பட்டு 7.30, கல்லக்குடி 5.10, வாத்தலை அணைக்கட்டு 8, சிறுகுடி 7, பொன்மலை 4.40, துவாக்குடி 11. சராசரி 6 மி.மீ மழை பதிவாகியுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகளிடம் இருந்து 25–ந் தேதிக்குள் நெல் கொள்முதல் செய்யப்படும் கலெக்டர் தகவல்



காஞ்சீபுரம்

கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் கொண்டு வந்துள்ள நெல் 25–ந் தேதிக்குள் கொள்முதல் செய்யப்படும் என்று கலெக்டர் கஜலட்சுமி தெரிவித்துள்ளார்.

<u>நெல் கொள்முதல்</u>

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் கஜலட்சுமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

காஞ்சீபுரம் மாவட்டத்தில் 2015–16 காரீப் பருவ காலத்தில், அதிக அளவிலான பருவ மழை பெய்ததன் காரணமாக, நெல் விளைச்சல் அதிகரித்தது. இதன் காரணமாக, விவசாயிகளிடம் இருந்து நெல்

கொள்முதல் நிலையங்களை கூடுதலாக திறந்திட கோரி கோரிக்கைகள் வரப்பெற்றன.

அதைத்தொடர்ந்து, காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் உத்தரவின் பேரில் 68 நேரடி கொள்முதல் நிலையங்கள் மற்றும் 14 துணை கொள்முதல் நிலையங்கள் என்று மொத்தம் 82 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு கடந்த பிப்ரவரி மாதம் 22–ந் தேதி முதல் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

ஆய்வுக்கூட்டங்கள்

மேலும், நெல் கொள்முதலை ஒழுங்குப்படுத்த மாவட்ட கலெக்டர் மற்றும் அலுவலர்கள் முன்னிலையில் மார்ச் மாதம் 21, 30, ஏப்ரல் 6, 13 ஆகிய தேதிகளில் வேளாண்மைத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, கூட்டுறவுத்துறை, வருவாய்த்துறை மற்றும் புள்ளியியல் துறை அலுவலர்களின் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு, நெல் கொள்முதலை விரைந்து மேற்கொள்ள தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இதன் பயனாக, கடந்த பிப்ரவரி மாதம் 22–ந் தேதி முதல் மே மாதம் 9–ந் தேதி வரை 22 ஆயிரத்து 282 விவசாயிகளிடம் இருந்து 46,950.520 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் 29–ந் தேதி வரை கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்காக விவசாயிகளுக்கு ரூ.53.99 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

சேமிப்பு மையங்கள்

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ள நெல்லினை வேடப்பாளையம் மற்றும் வி.வி.நல்லூர் திறந்த வெளி சேமிப்பு மையங்கள், வேடப்பாளையம், காஞ்சீபுரம் சேமிப்பு கிடங்குகள் மற்றும் திம்மாவரம் நவீன அரிசி ஆலை போன்ற இடங்களில் சேமிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் சுமார் 2 ஆயிரம் விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொண்டு வந்து வைத்துள்ள 21,918 டன் மெட்ரிக் நெல் வருகிற 25–ந் தேதிக்குள் கொள்முதல் செய்யப்படும். கொள்முதல் நிலையத்தில் உள்ள நெல் மூட்டைகள் மழையால் நனையாமல் தடுக்க முன்னேற்பாடாக கருப்பு நிற பாலித்தீன் கவர் மூலம்

பாதுகாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நீலகிரியில் 27-ந்தேதி உள்ளூர் விடுமுறை கலெக்டர் அறிவிப்பு**



ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் வருகிற 27-ந்தேதி தொடங்கும் மலர் கண்காட்சியை முன்னிட்டு அன்றைய தினம் நீலகிரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவித்து கலெக்டர் சங்கர் உத்தரவிட்டு உள்ளார்.

மலர்கண்காட்சி

நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் கோடைவிழா நடத்தப்படுகிறது. இந்த கோடை விழாவின் ஒரு பகுதியாக காய்கறி கண்காட்சி, பழக்கண்காட்சி, ரோஜா கண்காட்சி, மலர்கண்காட்சி, கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுவது வழக்கம். இந்த ஆண்டு தேர்தல் காரணமாக ரோஜா கண்காட்சி, காய்கறி கண்காட்சி ஆகியவை ரத்து

செய்யப்பட்டு உள்ளன. வருகிற 21, 22 ஆகிய தேதிகளில் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இதுதவிர வருகிற 27,28,29 ஆகிய தேதிகளில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் புகழ்பெற்ற மலர் கண்காட்சி 3 நாட்கள் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு தாவரவியல் பூங்காவில் 15 ஆயிரம் பூந்தொட்டிகளில் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளன. மேலும் பூங்கா முழுவதும் 2 லட்சம் மலர்செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளன. இந்த மலர் செடிகள் அனைத்திலும் பூக்கள் பூத்து குலுங்குகின்றன.

விடுமுறை

இந்த நிலையில் மலர் கண்காட்சி தொடக்க நாளான வருகிற 27-ந்தேதி நீலகிரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து கலெக்டர் சங்கர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் வருகிற 27-ந்தேதி தொடங்கி 29-ந்தேதி வரை 3 நாட்கள் மலர் கண்காட்சி நடக்கிறது. இதனை முன்னிட்டு 27-ந்தேதி நீலகிரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது. அன்றைய தினம் மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கப்படும்.

பணிநாள்

கருவூலம் மற்றும் சார்கருவூலகங்களில் அரசு பாதுகாப்புக்கான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களுடன் செயல்படும். இந்த விடுமுறை தினத்திற்கு பதிலாக அடுத்த மாதம் (ஜூன்) 4-ந் தேதி அன்று பணி நாளாக அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.